# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 310/2023

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW2<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : Thiru. Jaisankar |
| Father / Husband Name | : Raja |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 7th day of April, 2026.

( Accused is present )

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

**நேரம் 12.35 மணி**

நான் தற்போது பழவேற்காட்டில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 23-04-2021 அன்று மாலை 3.00 மணிக்குமேல் உப்புகழிவரம் அந்த இடத்தில் ஒரு பெண் பழைய துணியை போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தார். நான் அருகில் சென்று பார்த்தபோது அது எங்கள் ஊரைச் சேர்ந்த பெண் சிவரஞ்சனி

ஆவார். நான் அவரை விசாரித்தேன் அப்போது பாத்ரூம் போகும்போது ஒருவர் பின்னாலில் இருந்து அடித்து நைட்டி, பிரா, ஜட்டியை கிழித்து அவர் கத்தியவுடன் முகத்தில் அடித்து, முகத்தில் குத்தி, தொண்டையில் குத்தி சிவரஞ்சனியை கற்பழித்தார் என்றும், அவரை மிரட்டி அந்த குளம் கழிவுநீர் தண்ணீரில் அவர் முகத்தை வைத்து அழுத்தி பிடித்துக் கொண்டிருந்ததாகவும், அவர் இறந்திருப்பார் என்று விட்டுவிட்டு சென்றதாகவும், பின்னர் அந்த பெண் எழுந்து பின்னர் எழுத்ததாக என்னிடம் கூறினார். அம்மணமாக அந்த போட்டில் இருந்த பழைய துணியை அணிந்திருந்தார். நான் ஊரிலிருந்து அங்கம்மாவை அழைத்து வந்தேன். பின்னர் பழவேற்காடு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். மறுநாள் பொன்னேரி டிஎஸ்பி வந்து சம்பவ இடத்தை காட்ட சொன்னார். அந்த இடத்தில் என் முன்னிலையில் வரைபடம் வரைந்தார். அப்போது என்னுடன் சின்னராசுவும் இருந்தார். பார்வை மகஜரில் கையொப்பமிட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 310/2023**

| Deposition of Witness for | Prosecution PW3 |
| --- | --- |
| | Defence |
| | Court |

| | | |
| --- | --- | --- |
| Name | : | **Thiru. Chinnarasu** |
| Father / Husband Name | : | Munusamy |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 7th day of April, 2026.

**( Accused is present )**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :</u>

**<u>முதல் விசாரணை :</u>**

**நேரம் 12.45 மணி**

நான் தற்போது பழவேற்காட்டில் வசித்து வருகிறேன். 23-04-2021 அன்று மதியம் 3.00 மணியளவில் எங்கள் கிராமத்தை சேர்ந்த சிவரஞ்சனி பாத்ரூம் போக Forest Office அருகில் சென்றுள்ளார். அப்போது எங்கள் பக்கத்து கிராமத்தை சேர்ந்த பன்னீர்செல்வம் என்ற மீனவர் சிவரஞ்சனி மலம் கழிக்கும்போது

பின்னால் இருந்து தள்ளிவிட்டு சிவரஞ்சனியின் முகம், வாயில் அடித்தும், குத்தியும், அவர் உடம்பெல்லாம் இரத்தம் வந்துகொண்டிருந்த நிலையில், அவருடைய நைட்டி, ஜட்டி, பிராவை கிழித்துவிட்டு சிவரஞ்சனியை கற்பழித்து, நகத்தால் சிவரஞ்சனியின் தொடையை கீறியுள்ளார். வலிதாங்காமல் சிவரஞ்சனி கத்தியவுடன் வாயில் குத்தியுள்ளார். அருகில் இருந்த கழிவுநீர் குட்டையில் சிவரஞ்சனியின் கழுத்தை பிடித்து தண்ணீர் வைத்து அமுக்கியுள்ளார். அவர் மூச்சு திணறல் ஏற்பட்டு சோர்வாகி படுத்துள்ளார். இறந்துவிட்டார் என்று நினைத்து அங்கிருந்து சென்றுள்ளார். அந்த வழியாக ஜெய்சங்கர் வந்துள்ளார். அந்த பெண் படகில் இருந்த பழைய துணியை எடுத்து தன் உடம்பில் போர்த்திய நிலையில் இருந்துள்ளார். ஜெய்சங்கர் அதை பார்த்து அவரை விசாரித்து பழவேற்காடு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளார். ஜெய்சங்கர் அவர் தங்கை சிவரஞ்சனியை மருத்துவமனையில் சேர்த்துள்ளார். காவல் நிலையத்தில் தகவல் கொடுத்தோம். சம்பவம் நடந்த இடத்தில் பெண் போலீசார் வந்தார்கள். சம்பவயிடத்தை காட்டினோம். அவர்கள் அந்த இடத்தை படம் வரைந்தார்கள். தற்போது என்னிடம் காடடப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். நானும் ஜெய்சங்கரும் கையொப்பம் செய்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.